# ❁ஸ்ரீநிவாச திருக்கல்யாணம் ❁



அரசன் தனது தவறை உணர்ந்து அனலிடை மெழுகாய் உருகினான். அப்பொழுது அந்தக் குடிசைக்குள் கோடி சூரியப் பிரகாசத்தோடு கூடிய பேரொளி தோன்றியது.

ஸ்ரீமந் நாராயணன் சங்கு சக்கர பீதாம்பரியாகக் காட்சி அளித்தார். சங்கு முழங்கியது. அந்தக் குடிசைக்குள் தேவ துந்துபிகள் ஒலியும், நான்மறைகளின் ஓசையும் ஒலித்தன.

பீமனும், அவனது மனைவியும் பகவானின் திருத்தாளினைப் பன்முறை வீழ்ந்து

சேவித்தனர். தொண்டைமான் செயலற்று சிலையொத்த நிலைபெற்றுக் கண்ணில் நீரைப் பெருகவிட்டு நின்றிருந்தான்.

பீமன், சிரமீது கரம் உயர்த்தி, பணிவன்போடு பிரார்த்தித்தான்.

"ஸ்ரீநிவாஸா! கோவிந்தா! இந்த ஏழையின் இச்சர்வ சாதாரண வழிபாட்டிற்குத் திருவுளம் கனிந்து கண்கொள்ளாக் காட்சி கொடுத்தாயே! இந்த ஏழையின் குடிலில் உனக்கு என்ன இருக்கப் போகிறது. பரந்தாமா! அன்றாடம் கஞ்சிக்கே அல்லல் படுகிறவர்கள் நாங்கள்.

விதுரனைப் போல தேவரீருக்கு விருந்து செய்ய இயலாதவர்கள். சபரியைப் போல கனி வகைகளைக் கொடுக்க சக்தியற்றவர்கள். குசேலனைப் போலே அவல்பொரி கூட அர்ப்பணிக்க இயலாதவர்கள். எங்களுக்கு உன்னைத் தியானிக்கும் படியான மந்திரங்கள் தெரியாது. போற்றிப் பணிய வேண்டிய வழிமுறைகள் ஒன்றும் புரியாது. இப்படிப்பட்ட இந்த வறியவனின் மாளிகைக்கு எழுந்தருளியுள்ளீர்களே சுவாமி!" என்றான் பீமன்.

திருமால் முகம் மலர, அன்பு பக்தர்களைத் திருநோக்கம் செய்து, "என் செல்வங்களே! நீங்கள் அன்போடு எது கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வேன்" என்று திருவாய் மலர்ந்தார். நிலமளந்த நிமலன் நிலத்தில் அமர்ந்தான்.

பீமனின் மனைவி மண் கலயத்தில் நீர் கொண்டு வந்து, பரமனின் திருப்பாதங்களில் வார்க்க, பீமன் பகவானின் திருப்பாதங்களை திருமஞ்சனம் செய்து, அத்தீர்த்தத்தைத் தன் தலை மீதும் மனைவியின் தலை மீதும் தெளித்துக் கொண்டான். இருவரும் அப்புனித நீரை உள்ளுக்குள்ளும் பருகினர்.

மண்ணினால் செய்யப்பட்ட பூக்களைக் கொண்டு வந்து பாத பூஜை புரிந்தான் பீமன்.

ஒரு மண் பாத்திரத்தில் பீமன் மனைவி கூழ் கொண்டு வந்து வைத்தாள். வெண்ணெய் உண்ணும் கண்ணன் - கல்லும், மண்ணும் கலந்த கூழையும் அமுதம் போல் உண்டு மகிழ்ந்தான்.

"பக்தர்களே! உங்கள் அன்பிற்கும், பக்திக்கும் யாம் கட்டுண்டோம். உங்கள் இருவருக்கும் வைகுந்தத்தில் வாழும் பெருவாழ்வை அளிக்கிறோம்" என்று திருவாய் மலர்ந்தார். தேவலோகத்தில் இருந்து விண் விமானம் வந்து இறங்கியது.

பீமனும் - பீமனின் மனைவியும் ஸ்ரீமந்நாராயணனின் திருவடியை வணங்கி, விண் விமானத்தில் அமர்ந்தனர். விண் விமானம் அவர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டது. தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்.

தொண்டைமான், கூனிக் குறுகிப் போய் - பேச முடியாமல் நிற்க நிலை கொள்ளாமல் - மனம் தளர்ந்து தன்னையே ஸ்ரீமந்நாராயணனின் கமலமலர்ப் பாதங்களுக்கு காணிக்கையாக்கினான்.

"வேங்கட வெற்பினிலே வாழும் வைகுந்த பதே! நெஞ்சத்து ஆணவத்தை அழித்த கேசவா! மதி இழந்த பக்தனை மன்னிப்பாயாக! நாராயணா! என் பிழையைப் பொறுத்து முக்திமார்க்கம் அருள்வாய் ஸ்ரீநிவாஸா!" என்றெல்லாம் பலவாறு பிரார்த்தித்தான். பகவானின் பங்கஜ மலர்ப் பாதங்களில் வீழ்ந்தான்.

ஆணவம் அழிந்து - அகந்தை ஒடுங்கி - பக்தி பெருகி - புனிதத்தன்மை பெற்று தேவனின் திருவடிகளில் வீழ்ந்து தொண்டைமானுக்கும் வைகுந்த பிராப்தியை அளித்து அருளினார் ஸ்ரீநிவாஸப் பெருமான்!

## தவம் புரியும் ஸ்ரீநிவாஸப்பெருமான் :-

ஸ்ரீமந்நாராயணனும், பத்மாவதியும் ஆனந்த நிலையத்தில், பக்தர்களைப் பரிபாலித்த வண்ணம் எழுந்தருளியிருந்தனர்.

பூமண்டலத்தைக் காக்க வந்த கருணை கடலின் இதயக்கமலத்தில் அவதாரத்தின் காரணத்தால் ஏதோ ஒருவித கலக்கம் ஏற்பட்டது. குபேரனிடம் தான் கடன்பட்டிருப்பதை எண்ணிப் பார்த்தார். செல்வத் திருமகளாகிய லக்ஷ்மி தம்மிடம்

வந்து சேர்ந்தால் தான் குபேரனின் கடனைத் தீர்க்க முடியும் என்றும் எண்ணினார்.

அந்த எண்ணம் கவலையாக உருவெடுத்தது. அக்கவலையால் ஸ்ரீநிவாஸன், சதா மௌனமாகவே இருந்தார்.

திருமாலின் மௌனநிலை கண்டு, நீங்காத மனவேதனை கொண்ட பத்மாவதி, "என்னை ஆளும் ஈசனே! எம்பிரானே! மாயவனே! வடமதுரை மைந்தனே! யமுனைத் துறைவோனே! ஆயர்குலத்துத் தோன்றிய அணி விளக்கே! தாய்க்குத் தரணி முழுதும் செம்பவள வாயினில் காட்டி அருளிய கோகுலத்து மணிவண்ணா! கண்ணா! உமது திருவடித் தாமரைகளில் தூயமலர் தூவித் தொழுது, திருநாமம் போற்றித் துதித்து வரும் இந்த ஏழை பிழை ஏதும் புரிந்து விட்டேனா! தேவரீர் இப்படி மௌனமாய் இருந்துவிட்ட காரணம் அறியலாமோ?" என்று வினவினாள்.

பத்மாவதியின் கருவண்டுகள் சுழலும் கண்களில் கண்ணீர் முத்தமிட்டு நின்றன.

கலக்கமுற்ற பத்மாவதியின் கண்ணீரைத் தமது திருக்கரத்தால் துடைத்தவாறு ஸ்ரீநிவாஸன், "பத்மாவதி! பதிக்கு ஏற்ற பாத சேவை புரியும் உன்னிடம் குற்றமேது? குறை ஏது? நமது திருமணத்திற்காக குபேரனிடம் கடனாகப் பெற்றுக்கொண்ட ஒரு கோடி பதினான்கு லக்ஷம் ராமநிஷ்காமங்களைத் திருப்பிக் கொடுப்பதற்கான மார்க்கத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.

சர்வ காலங்களிலும் என் வக்ஷஸ்தலத்தில் வாசம் புரிந்து வந்த லக்ஷ்மி இப்பொழுது கரவீரபுரத்தில் தவமிருக்கிறாள். சர்வ கல்யாண குணங்களால் என்னை ஆட்கொண்ட அஷ்டலக்ஷ்மி என்னிடம் இல்லாததால் என் சக்திகள் செயலற்று விட்டன. இவற்றை எண்ணித்தான் மௌனமாகி விட்டேன் பத்மாவதி" என்றார் ஸ்ரீநிவாஸன்.

"சுவாமி இதற்காகவா சஞ்சலம்! தேவரீர் திருமகளை ஆனந்த நிலையத்திற்கு எழுந்தருளச் செய்யுங்கள். சுவாமியின் துயரம் விலகும். உங்கள் இருவருக்கும் பாதபூஜை புரிவதையே நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்" என்றாள் பத்மாவதி.

ஸ்ரீநிவாஸன் சிந்தை குளிர்ந்தார். பத்மாவதியின் மொழிக்கு ஏற்பத் திருமகளை கரவீரபுரத்திற்கு அழைத்துவரத் திருவுள்ளம் கொண்டு, கரவீரபுரத்திற்குச் செல்ல முடிவு பூண்டார்.

**தொடரும். . .**